போலவே, கடந்த 3–11–2011 ஆம் தேதி அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கல்வராயன் மலைப் பகுதியிலுள்ள ஏற்கெனவே பராமரிக்கப்படாத நிலையிலுள்ள பூங்காவைச் சீரமைத்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் அங்கே வைக்கப்படவேண்டும் என்றும், விளக்குகள் அங்கே அமைக்கப்பட வேண்டும் என்றும், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அங்கே அமைக்கப்படவேண்டும் என்றும், புதியதாக Boat வசதி அங்கே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்து, ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று இங்கே சுற்றுலாத் துறைக்கு கருத்துரு அனுப்பியுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆசியோடு அது ஆய்வு செய்யப்பட்டு நிச்சயமாக அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் வந்து மகிழ்வுறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு, அதைச் செய்வதற்கான முன்முயற்சி எடுப்பதற்காக அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

தரம் உயர்த்துதல்

***5709—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஜனவரி 31]

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூர் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூரில் செயல்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு, ஆதிதிராவிடர் மாணவர்களின் மீது, கல்வி வளர்ச்சியின் மீது அதிக அக்கறை கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தவுடன் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட, அரசு அரசாணை (நிலை) எண் 99, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 31–10–2011 இல் ஆணை வெளியிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், டி.டி. மோட்டூரில் செயல்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தியமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். தரம் உயர்த்தப்பட்ட டி.டி. மோட்டூரில் உள்ள மேல் நிலைப்பள்ளிக்குக் கணித ஆசிரியரும், விஞ்ஞான ஆசிரியரும் அமர்த்தப்படவில்லை. மேலும்* Lab *வசதியும் இல்லை. 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட டி.டி. மோட்டூர் ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில், பள்ளிகளுக்கிடையே நடக்கும் பெரும்பான்மையான விளையாட்டுப் போட்டிகள் அந்தப் பள்ளித்*

திடலில் நடக்கின்றன. எனவே, போதிய இட வசதியுள்ள அந்தப் பள்ளியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. லிங்கமுத்து, கட்டடம் கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். நீங்கள் மற்ற கேள்விகளுக்குச் சென்றால், அவற்றிற்குரிய பதில்கள் அமைச்சரிடம் இருக்க வேண்டும் அல்லவா?* Please sit down.

திரு. கு. லிங்கமுத்து: *நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

கட்டட வசதி

6232—திரு. வி.சி. ஆறுக்குட்டி:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகர், போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, போக்குவரத்துக் கழகங்களின் வருவாயினை உயர்த்தவும், தரமான சேவைகள் வழங்கவும் ஆணையிட்டு, அதன்படி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், கோயம்புத்தூர், கவுண்டம்பாளையம் தொகுதி, விளாங்குறிச்சி கிராமம், சேரன்மாநகரில் அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை மூலம் அடுக்குமாடி வணிக வளாகத்துடன் கூடிய பணிமனை வளாகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.